திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நேற்று (12.12.2024) மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகள் குறித்து நடைபெற்ற ஆய்வுக்கூட்டத்தில், மாஞ்சோலை தேயிலை தோட்ட பணியாளர்களுக்கு ரெட்டியார்பட்டி அடுக்குமாடி குடியிருப்பில் வீடு ஒதுக்கீட்டு ஆணைகளை சட்டமன்ற பேரவைத் தலைவர் மு.அப்பாவு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு ஆகியோர் வழங்கினர். உடன் மாவட்ட கண்காணிப்பாளர் /தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழக மேலாண்மை இயக்குநர் சந்தீப் நந்தூரி, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநர் தட்சிணாமூர்த்தி, நகராட்சி நிர்வாக இயக்குநர் சிவராசு, மாவட்ட ஆட்சித் தலைவர் மருத்துவர் கா.ப.கார்த்திகேயன், பேரூராட்சிகள் இயக்குநர் கிரண்குராலா, மாநகர காவல் ஆணையாளர் ரூபேஸ் குமார் மீனா, காவல் கண்காணிப்பாளர் சிலம்பரசன் , பாளையங்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல் வஹாப் , நாங்குநேரி சட்டமன்ற உறுப்பினர் ரூபி.ஆர்.மனோகரன், திருநெல்வேலி சட்டமன்ற உறுப்பினர் நயினார் நாகேந்திரன் , மாநகராட்சி மேயர் கோ.ராமகிருஷ்ணன், மாநகராட்சி ஆணையாளர் மரு.என்.ஓ.சுகபுத்ரா, துணை மேயர் கே.ஆர்.ராஜு , மாவட்ட ஊராட்சித் தலைவர் வி.எஸ்.ஆர்.ஜெகதீஸ் , முன்னாள் சட்டமன்ற பேரவைத் தலைவர் இரா.ஆவுடையப்பன் , அரசு அலுவலர்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் பலர் உள்ளார்கள்.

மாஞ்சோலை தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களின் கோரிக்கைகள்

தமிழ்நாடு அரசால் நிறைவேற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படும்!

அமைச்சர் கே.என்.நேரு தகவல்!

சென்னை, டிச.13- நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு நேற்று (12.12.2024) திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் வட்டம், மாஞ்சோலை தேயிலை தோட்ட தொழிலாளர்களுக்கு தெற்கு பாப்பான்குளம் பகுதியில் தமிழ்நாடு நகர்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் மூலம் கட்டப்பட்டுள்ள அடுக்குமாடி குடியிருப்பில் வீட்டிற்கான சாவிகளை வழங்கி, குத்து விளக்கேற்றி வைத்தார்.

தொடர்ந்து, மாஞ்சோலையில் உள்ள தொடக்கப் பள்ளியில் மாஞ்சோலை தேயிலை தோட்ட பணியாளர்களுடன் அமைச்சர் கே.என். நேரு தலைமையில், கலந்துரையாடல் நிகழ்ச்சி நடைபெற்றது. '

இக்கூட்டத்தில் அப்பகுதி மக்களின் கோரிக்கை மனுக்களை பெற்றுக் கொண்டார்கள்.

இந்நிகழ்வில், மாவட்ட ஆட்சித் தலைவர் மருத்துவர் கா.ப.கார்த்திகேயன், பாளையங்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மு. அப்துல் வஹாப், முன்னாள் சட்டமன்ற பேரவைத் தலைவர் இரா.ஆவுடையப்பன் உட்பட அரசு அலுவலர்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டார்கள்.

பின்னர், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு தெரிவித்த தாவது:

மாஞ்சோலை எஸ்டேட் பகுதியில் வாழும் மக்களுக்கு தேவையான அனைத்து அடிப்படை வசதிகளும் நீதிமன்ற உத்தரவுக்கு உட்பட்டு செய்து கொடுக்கப்படும், இந்த மக்களின் வாழ்வாதரங்களை மேம்படுத்துவதற்காக தமிழ்நாடு முதலமைச்சரை சந்திக்கவும் ஏற்பாடு செய்யப்படும். தமிழ்நாடு அரசு மாஞ்சோலை பகுதி மக்களுக்கான 11 வகையான சிறப்பு நலத்திட்டங்களை செயல்படுத்தி வருகிறது,

மாஞ்சோலை பகுதி மக்களுக்கு கலைஞர் வீடு கட்டும் திட்டத்தில் வீடு கட்டி கொடுக்கப்படும், இங்கு வசித்த 4 தொழிலாளர்களுக்கு அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க இன்றைய தினம் தெற்கு

பாம்பான்குளத்தில் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் அடுக்குமாடி குடியிருப்பில் குடியிருப்பிற்கான வீடுகள் வழங்கப்பட்டுள்ளது. சிலருக்கு ரெட்டியார்பட்டி உள்ளிட்ட பகுதிகளில் வீடு கொடுப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இப்பகுதி மக்களுக்கு முழுமானியத்துடன் வீடுகள் வழங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.

மேலும், மாஞ்சோலை பகுதியில் வாழும் மக்கள் சமத்துவமாக வாழ்வதற்கு சமத்துவபுரம் போல் ஒரே இடத்தில் வசிக்கவும் விருப்பம் தெரிவித்துள்ளனர், அதுபோன்று வேண்டும் என்று அனைவரும் விரும்பினால் அரசின் கவனத்திற்கு கொண்டு சென்று நடைமுறைகளுக்கு உட்பட்டு வீடுகள் கட்டிக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

கலைஞர் மகளிர் உரிமைத்தொகை இங்கு பலருக்கு கிடைத்துள்ளது. இன்னும் கிடைக்காதவர்களும் உள்ளனர். அவர்களுக்கு உரிமைத்தொகை கிடைக்க ஏற்பாடு செய்யப்படும்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மாஞ்சோலை மக்களுக்கு தேவையான அனைத்து உதவிகளையும் செய்ய உத்தரவிட்டுள்ளார். மேலும், நீதிமன்றத்தின் உத்தரவுக்கு உட்பட்டு அனைத்து தேவையான எல்லா வசதிகளும் நிறைவேற்றப்படும்.

இவ்வாறு அமைச்சர் கே.என்.நேரு தெரிவித்தார்.

இந்நிகழ்வில், களக்காடு முண்டந்துறை புலிகள் காப்பகம் துணை இயக்குநர் இளையராஜா, மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.மா.சுகன்யா, சேரன்மகாதேவி சார் ஆட்சியர் (பொ) செல்வி.அம்பிகா ஜெயின், வட்டாட்சியர் காஜா கரிபூன்நவாஸ் உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.

வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி. மூர்த்தி தலைமையில் நேற்று (12.12.2024) சென்னை, நந்தனம் ஒருங்கிணைந்த வணிகவரி மற்றும் பதிவுத் துறை வளாகக் கூட்டரங்கில் 2024ஆம் ஆண்டு நவம்பர் மாதத்திற்கான அனைத்து துணை பதிவுத் துறை தலைவர்கள், மாவட்ட பதிவாளர்கள் (நிர்வாகம் (ம) தணிக்கை), மாவட்ட வருவாய் அலுவலர்/தனித்துணை ஆட்சியர்கள் (முத்திரை) மற்றும் உதவி செயற்பொறி யாளர்கள் ஆகியோரின் பணித்திறன் குறித்த ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் வணிகவரி மற்றும் பதிவுத் துறை அரசு முதன்மைச் செயலாளர் பிரஜேந்திர நவ்நீத், பதிவுத் துறை தலைவர் தினேஷ் பொன்ராஜ் ஆலிவர், கூடுதல் பதிவுத் துறை தலைவர்கள் மற்றும் பதிவுத் துறை உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

கடந்த ஆண்டைக் காட்டிலும் நடப்பாண்டில்

பதிவுத்துறை வருவாய் ரூ.1,891 கோடி அதிகரிப்பு!

ஆய்வுக் கூட்டத்தில் அமைச்சர் பி.மூர்த்தி அலுவலர்களுக்கு பாராட்டு!

சென்னை, டிச. 13- வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி, தலைமையில் நேற்று (12.12.2024) சென்னை, நந்தனம் ஒருங்கிணைந்த வணிகவரி மற்றும் பதிவுத்துறை அலுவலகக்கூட்டரங்கில்2024-ஆம் ஆண்டு நவம்பர் மாதத்திற்கான அனைத்து துணை பதிவுத்துறை தலைவர்கள், மாவட்ட பதிவாளர்கள் (நிர்வாகம் (ம) தணிக்கை), மாவட்ட வருவாய் அலுவலர்/ தனித்துணை ஆட்சியர் (முத்திரை) மற்றும் உதவி செயற்பொறியாளர்கள் ஆகியோரின் பணித்திறன் குறித்த ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது.

பதிவுத்துறையில் கடந்த 2023-2024 நிதி ஆண்டின் டிசம்பர் மாதம் 11 ஆம் தேதி (11.12.2023) வரை வருவாய் ரூ.12634 கோடியும் நிகழும் 2024-2025 நிதி ஆண்டின் டிசம்பர் மாதம் 11 ஆம் தேதி (11.12.2024) வரை ரூ.14525 கோடி வருவாய் ஈட்டப்பட்டுள்ளது. இது கடந்த நிதி ஆண்டின் வருவாயுடன் ஒப்பிடுகையில் இந்த நிதி ஆண்டில் நேற்று வரையில் ரூ.1891 கோடி வருவாய் கூடுதலாக ஈட்டப்பட்டுள்ளது.

அலுவலர்களுக்குப் பாராட்டு!

கூட்டத்தில் பேசிய அமைச்சர் பி.மூர்த்தி, அரசுக்கு அதிக வருவாய் ஈட்டித்தந்த பதிவுத்துறை

அலுவலர்களுக்கு பாராட்டு தெரிவித்து, இந்த நிதி ஆண்டின் மீதமுள்ள மாதங்களிலும் வருவாய் இலக்கினை எய்திட பணிகளை தொய்வின்றி மேற்கொள்ள அறிவுறுத்தினார்.

மேலும் பெரும்பாலான சார் பதிவாளர் அலுவலகங்களில் பதிவு செய்த ஆவணங்களை அதே நாளிலே திருப்பி ஒப்படைத்தல் சதவீதம் கூடியிருப்பதை சுட்டிக்காட்டி பாராட்டு தெரிவித்து, அனைத்து சார் பதிவாளர்களும் மேற்கண்ட பணியினை சிறப்பாக செய்வதை மாவட்ட பதிவாளர்கள் மற்றும் துணை பதிவுத் துறை தலைவர்கள் உறுதி செய்யுமாறு அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அரசு முதன்மைச் செயலாளர் பிரஜேந்திர நவ்நீத், பதிவுத்துறை தலைவர் தினேஷ் பொன்ராஜ் ஆலிவர், கூடுதல் பதிவுத்துறை தலைவர்கள் மற்றும் பதிவுத்துறை உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

சென்னை கலைஞர் நூற்றாண்டு உயர் சிறப்பு மருத்துவமனையில் 18 மாதங்களில்

5,020 அறுவை சிகிச்சைகள் செய்து மாபெரும் சாதனை!

அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேரில் சென்று நலம் விசாரித்தார்!

சென்னை, டிச. 13- சென்னை, கலைஞர் நூற்றாண்டு உயர்சிறப்பு மருத்துவமனை 18 மாதம் காலத்தில் 5,020 அறுவை சிகிச்சைகள் செய்யப்பட்டு மாபெரும்சாதனை படைத்துள்ளது என்று

அமைச்சர் மா.சுப்பிரமணியன் சிகிச்சை பெற்று வருபவர்களைநேரில் சந்தித்து நலம் விசாரித்தார்

சென்னை, கலைஞர் நூற்றாண்டு உயர்சிறப்பு மருத்துவமனை தொடங்கப்பட்ட குறுகிய காலங்களில் (18 மாதங்கள்) 5,020 அறுவைசிகிச்சைகளும், 538 நரம்பியல் அறுவை சிகிச்சைகள், 1375 சிறுநீரக அறுவை சிகிச்சைகள், 512 பொது அறுவை சிகிச்சைகள், 1000த்திற்கும் மேற்பட்ட புற்றுநோய் அறுவை சிகிச்சைகள்மற்றும் 137 இருதய பைபாஸ் மற்றும் இதய வால்வு அறுவை சிகிச்சைகள் செய்யப்பட்டுள்ளது. மேலும் 10 மாதத்தில் இருதயவியல் துறையில் 1,683 பேருக்கு ஆஞ்சியோகிராம், ஸ்டென்ட் மற்றும்பேஸ் மேக்கர் பொருத்தும் சிகிச்சைகள் நடைபெற்று சாதனை படைத்துள்ளது.

இந்நிலையில் அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (12.12.2024) மருத்துவமனைக்கு வருகை புரிந்து, சிகிச்சை பெற்று வருபவர்களை சந்தித்து நலம் விசாரித்தார். இந்த மருத்துவமனை குறுகிய காலத்தில் சிறப்புடன் செயல்படுவதற்கு காரணமாக உள்ள மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் மருத்துவம் சார்ந்த களப்பணியாளர்களுக்கு வாழ்த்துக்கள் தெரிவித்தார்.

பல்கலைக் கழகங்களின்

ஆட்சி மன்றப் பேரவை உறுப்பினர்களாக - சட்டமன்ற உறுப்பினர்கள் தேர்வு!

பேரவைத் தலைவர் மு.அப்பாவு அறிவிப்பு!

சென்னை, டிச. 13 - சட்டப் பேரவையில், 10.12.2024 அன்று, பேரவைத் தலைவர் மு.அப்பாவு அவர்கள், தமிழ்நாட்டில் உள்ள பல்வேறு பல்கலைக் கழகங்களின் ஆட்சி மன்றக் குழு உறுப்பினர்களாக, சட்டப் பேரவை உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள விவரத்தை அறிவித்தார்.

பேரவைத் தலைவர் அவர்கள், இதுகுறித்து வெளியிட்ட அறிவிப்பு வருமாறு:-

பல்கலைக்கழகங்களின் ஆட்சி மன்றப் பேரவை, ஆட்சிக் குழு, மேலாண்மைக் குழுமம் மற்றும் கல்விக் குழு ஆகியவற்றில் அலுவல் சார் பற்ற உறுப்பினர்களாகப் பணிபுரிய உறுப்பினர்களிடமிருந்து முறையாக வேட்புத் தாள்கள் வரப்பெற்றன.

அழகப்பா பல்கலைக்கழகம் ஆட்சி மன்றப் பேரவை டாக்டர் வை. முத்துராஜா,

பாரதியார் பல்கலைக்கழகம் ஆட்சி மன்றப் பேரவை ஈ.ஆர்.ஈஸ்வரன், ஆர். கணேஷ்,

பாரதிதாசன் பல்கலைக்கழகம் ஆட்சி மன்றப் பேரவை ரா. இளங்கோ, ப.அப்துல் சமது,

மதுரைக் காமராஜர் பல்கலைக்கழகம் ஆட்சி மன்றப் பேரவை ஆ. வெங்கடேசன், மு. பூமிநாதன், செ. ஊர்வசி அமிர்தராஜ், வி.வி. ராஜன் செல்லப்பா,

மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம் ஆட்சி மன்றப் பேரவை டாக்டர் தி. சதன் திருமலைக் குமார், ரூபி ஆர். மனோகரன்,

பெரியார் பல்கலைக்கழகம் ஆட்சி மன்றப் பேரவை பெ. ராமலிங்கம், ட்டி. இராமச்சந்திரன்,

தமிழ்நாடு டாக்டர் எம். ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகம் ஆட்சி மன்றப் பேரவை டாக்டர் நா. எழிலன், வி.ஜி. இராஜேந்திரன்,

தமிழ்ப் பல்கலைக்கழகம் ஆட்சி மன்றப் பேரவை டி.கே.ஜி. நீலமேகம், ம. பிரபாகரன்,

சென்னைப் பல்கலைக்கழகம் ஆட்சி மன்றப் பேரவை அ. வெற்றிஅழகன், ஜோசப் சாமுவேல், க. கணபதி, ஐட்ரீம் இரா. மூர்த்தி, கோ. செந்தில் குமார், திருமதி கு. மரகதம் குமரவேல்,

அண்ணா பல்கலைக்கழகம் ஆட்சிக் குழு இ. பரந்தாமன், அண்ணா பல்கலைக் கழகம் ஆட்சிக் குழு ம. சிந்தனைச் செல்வன்,

தமிழ்நாடு ஆசிரியர் கல்வியல் பல்கலைக்கழக ஆட்சிக் குழு சி.வி.எம்.பி. எழிலரசன்,

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக மேலாண்மைக் குழுமம் தி. வேல்முருகன்,

தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழக மேலாண்மைக் குழுமம் வி.பி. நாகைமாலி,

தமிழ்நாடு கால்நடை மருத்துவம் அறிவியல் பல்கலைக்கழக மேலாண்மைக் குழுமம் டாக்டர் இரா. இலட்சுமணன்,

திருவள்ளூர் பல்கலைக்கழகம் கல்விக் குழு ஏ.பி. நந்தகுமார், ஏ.நல்லதம்பி தேர்ந்தெடுக்கப் பெறவேண்டிய உறுப்பி னர்களின் எண்ணிக்கையும், முறையாக வரப்பெற்றுள்ள வேட்புத் தாள்களின் எண்ணிக்கையும் சமமாக இருப்பதால் வேட் புத்தாள்கள் அளித்த உறுப்பினர்கள் அனைவரும் அந்தப் பதவிகளுக்கு முறையாக தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளதாக அறிவிக்கிறேன்.

மேற்குறிப்பிட்டுள்ள பல்கலைக்கழகங்களின் அமைப்புகளுக்குத் தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்களின் பதவிக்காலம் தேர்ந்தெடுக்கப்பட்ட நாளிலிருந்து மூன்று ஆண்டுக்காலங்களாக இருப்பினும், அவர்கள் 16-வது ஆட்சி மன்றப் பேரவை சட்டமன்றப் பேரவை காலம் முடியும்வரை அப்பதவிகளில் ட்பணியாற்றுவர். தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள உறுப்பினர் ஏதாவது ஒரு காரணத்திற்காக பேரவை உறுப்பினர் பதவி இழக்க நேரிட்டால் அந்நாளோடு பல்கலைக்கழகத்தின் அமைப்பில் அவர் வகித்து வரும் உறுப்பினர் பதவியும் முடிவடையும்.

இவ்வாறு பேரவைத் தலைவர் மு.அப்பாவு அவர்கள் அறிவித்தார்.

கழகத் தகவல் தொழில்நுட்ப அணியின் திருச்சி மண்டல நிர்வாகிகள் ஆலோசனை மற்றும் ஆய்வுக் கூட்டம் மாவட்ட கழகத் தலைமை அலுவலகமான கலைஞர் அறிவாலயத்தில் நடைபெற்றது. இதில் தெற்கு மாவட்ட கழக செயலாளர் பள்ளி கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தலைமையில் நடந்தது. இந்த நிகழ்வில், கழகத் தொழில்நுட்ப அணி செயலாளர் தொழில்துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா சிறப்புரை ஆற்றினார். மாவட்ட கழக செயலாளர்கள் வைரமணி, காடுவெட்டி தியாகராஜன், ஜெகதீசன் , சட்டமன்ற உறுப்பினர்கள் ஸ்டாலின்குமார், க.சொ.க. கணேசன், மண்டல பொறுப்பாளர் கேசவன் உள்ளிட்டோர் பங்கேற்று பேசினர். 2026 சட்டமன்றத் தேர்தலில் கழகத் தலைவர் முதலமைச்சர் உத்தரவுப்படி 200க்கும் அதிகமான தொகுதிகளில் வெற்றி பெறும் வகையில் பணியாற்றுவது குறித்து நிர்வாகிகளுக்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டன.

கோவை மாவட்டம், ஆனைமலை மாசாணியம்மன் கோயில் குடமுழுக்கு!

அமைச்சர்கள் வி. செந்தில் பாலாஜி, – பி.கே.சேகர்பாபு பங்கேற்பு!

கோவை, டிச.13- கோவை மாவட்டம், ஆனைமலை மாசாணியம்மன் திருக்கோயிலில் நேற்று (12.12.2024) நடைபெற்ற திருக்குடமுழுக்கு நன்னீராட்டு பெருவிழாவில் மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் வி.செந்தில் பாலாஜி, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பேரூர் ஆதீனம், நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்கள், அரசு உயர் அலுவலர்கள் மற்றும் இறையன்பர் கள் பங்கேற்று சிறப்பித்தனர்.

முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான அரசு பொறுப்பேற்றபின், ஆகம விதிகளின்படி குடமுழுக்கு நடைபெற்று 12 ஆண்டுகள் முடிவுற்றபின், திருப்பணிகள் மேற்கொள்ளப்படாத திருக்கோயில்களை கண்டறிந்து குடமுழுக்கு நடத்துதல், திருத்தேர் மற்றும் திருக்குளங்களை சீரமைத்தல், பக்தர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை மேம்படுத்தி வழங்குதல், திருக்கோயில் நிலங்களை ஆக்கிரமிப்பிலிருந்து மீட்டெடுத்தல் போன்ற பல்வேறு பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

கோவை மாவட்டம், ஆனைமலை, மாசாணியம்மன் திருக்கோயிலானது புகழ்பெற்ற திருக்கோயில்களில் ஒன்றாகும். இத்திருக்கோயிலில் மாசாணியம்மன் மயான தேவதையாக 17 அடி நீளத்தில் சயன கோலத்தில் அருள்பாலித்து வருகிறார். இத்திருக்கோயிலுக்கு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது கடந்த 12.12.2010 அன்று குடமுழுக்கு நடைபெற்றது. இத்திருக்கோயிலுக்கு மீண்டும் குடமுழுக்கு நடத்திடும் வகையில் ரூ.20.28 கோடி செலவில் 32 திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

அதனைத் தொடர்ந்து நேற்று (12.12.2024) மாசாணியம்மன் திருக்கோயிலுக்கு வேத மந்திரங்கள் முழங்க, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் வி.செந்தில் பாலாஜி, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, தவத்திரு பேரூர் ஆதீனம், நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்கள் முன்னிலையில் இறையன்பர்கள் மற்றும் பொதுமக்கள் பங்கேற்புடன் திருக்குடமுழுக்கு நன்னீராட்டு பெருவிழா வெகுவிமரிசையாக நடைபெற்றது.

முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான அரசு பொறுப்பேற்றபின், இன்று வரை 2,357 திருக்கோயில்களுக்கு குடமுழுக்கு நடைபெற்றுள்ளன.

இத்திருக்கோயில் வளாகத்தில் கடந்த டிசம்பர் 9-ஆம் தேதி யாகசாலை பூஜையுடன் தொடங்கிய விழாவில் கடந்த இரண்டு நாட்களாக யாக பூஜையில் சிவாச்சாரியார்கள் வேள்வி பூஜை, திருமுறை பாராயணம் செய்தனர். அதனைத் தொடர்ந்து இன்று நான்கு கால யாக சாலையில் பூஜிக்கப்பட்ட தீர்த்தக் குடங்களை சிவாச்சாரியார்கள் மேள, தாளங்கள் முழங்க விமானம் மற்றும் இராஜ கோபுரங்களுக்கு கொண்டு சென்று இறையன்பர்களின் ஆராவாரத்துடன் கோபுர கலசங்களுக்கு புனித நீரை ஊற்றி திருக்குடமுழுக்கை நடத்தி வைத்தனர்.

இந்நிகழ்ச்சியில் பேரூர் ஆதீனம் தவத்திரு சாந்தலிங்க மருதாசல அடிகளார், பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் கே.ஈஸ்வரசாமி, சட்டமன்ற உறுப்பினர் பொள்ளாச்சிவி.ஜெயராமன், கோவை மாவட்ட ஆட்சியர் கிராந்தி குமார் பாடி, பொள்ளாச்சி சார் ஆட்சியர் செல்வி ஏ.கேத்ரின் சரண்யா, கோவை மண்டல இணை ஆணையர் பி.இரமேஷ், உதவி ஆணையர் கைலாசமூர்த்தி, திருக்கோயில் அறங்காவலர் குழுத் தலைவர் முரளி கிருஷ்ணா மற்றும் அறங்காவலர்கள், செயல் அலுவலர்/உதவி ஆணையர் திருமதி இந்திரா, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

தி.மு.க. தலைமை நிலைய செயலாளரும் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத் தலைவருமான புச்சி எஸ்.முருகன் நேற்று (12.12.2024) சென்னை, மேற்கு மாம்பலம், ரெட்டி குப்பம் சாலையில் புதிதாகத் தொடங்கப்பட்ட ஷாதனா'ஸ் கிச்சன் – பார்சல் உணவகத்தை திறந்து வைத்தார். உணவக நிர்வாகி சூர்யா மற்றும் பத்திரிகையாளர் க.ராஜீவ் காந்தி உடன் இருந்தனர்.